A

## அறிவித்தல்

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்குட்படுத்தப்பட்ட **"உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)"** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச்சட்டமூலத்தின் 4 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதாகவும் நீதிமன்றம் பிரேரிக்கின்றவாறு 4 ஆம் வாசகம் திருத்தப்படுமாயின் முரண்பாடு நீங்கும் எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல எனவும் 2 ஆம் வாசகத்தில் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையிலான முரண்பாடு சட்டமூலத்தின் குழுநிலையில் திருத்தப்படமுடியும் எனவும் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.